**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 28 of 2021

Depositions of DW - 2 witness for ________ (Prosecution / Defence / Court)

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர். திரு. சேகர் |
| Father's Name | : | ரங்கநாதன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th **day of February** 2024.

முதல் விசாரணை –

1. நான் கேஜி மருத்துவமனையில் மருத்துவ கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். 40 வருடங்களாக மேற்படி மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையில் குறிப்பிடபட்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன்.

2. எங்கள் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்து அருணாச்சலம் என்பவருக்குரிய மருத்துவ குறிப்புகளின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **(சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

3. அருணாச்சலம் எங்கள் மருத்துவமனையில் 04.09.2020 ம் தேதியன்று மாலை 05.04 மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்திருக்கிறார். அவருக்கு உதவிக்கு அவருடைய மருமகனான ரவி என்பவர் வந்ததாக குறிப்பிடபட்டுள்ளது. 04.09.2020 காலக்கட்டமானது கொரோனா காலமாகும். அந்த சமயத்தில் எங்கள் மருத்துவமனையில் உடன் வந்த

உதவியாளரும் நோயாளியுடம் மருததுவமனையில் இருக்கலாம். அவ்வுதவியாளருக்கு பதிலாக வேறு உதவியாளரும் மாற்றி நோயாளியுடன் இருக்க அனுமதிப்போம்.

4. நோயாளிக்கான மருத்துவ செலவுகளை இன்சூரன்ஸ் நிறுவனம் செலுத்தியிருக்கிறது. 04.09.2020 ம் தேதியிட்ட Covid form and Pre admission check list ஆகியவற்றில் ரவி என்பவர் கையொப்பம் செய்துள்ளார். அருணாச்சலம் 11.09.2020 ம் தேதியன்று சிகிச்சையிலிருந்து வீட்டிற்கு அனுப்பபட்டார்.

<u>குறுக்குவிசாரணை</u>

1. நோயாளிகளுடன் உதவிக்கு வருபவர்களுடைய அடையாள அட்டையை பரிசோதனை செய்து கையொப்பம் பெற்றோமா என்றால் தற்பொழுது தான் அந்த நடைமுறை உள்ளது. 2020 காலக்கட்டத்தில் அந்நடைமுறை இல்லை. நோயாளியை சிகிச்சைக்கு சேரக்க உதவிக்கு வரும் நபர் தான் நோயாளி சிகிச்சை முடிந்து வீடு திரும்பும் வரை உடன் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்றால் சரிதான்.

2. admission form ல் கையொப்பம் செய்த ரவி மாலை 5.04 மணிக்கு முன்னர் எங்கிருந்தார் என்றும் கையொப்பம் செய்த பின்னர் எங்கு சென்றார் என்று என்னால் கூறஇயலாது என்றால் சரிதான்.

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2024.02.16 16:27:43 -1000

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**